சூலூர் பேரூராட்சி அலுவலகம்
கோவை – 641 402.

**ந.க.எண்: 535/2022/ஈ** **நாள் : 22.07.2022**

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், சூலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் 2021-2022ம் ஆண்டுக்கான 15வது நிதிக்குழு மான்யத் திட்டம் மூலம் கீழ்காணும் பணிகள் செய்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 05.08.2022ம் தேதியன்று பிற்பகல் 3:00 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகளை சூலூர் பேரூராட்சி அலுவலகத்தில் செயல் அலுவலர் அவர்களிடமோ, அல்லது அவரது அதிகாரம் பெற்றவரிடமோ நேரிலோ அல்லது அஞ்சல் வழியாகவோ கிடைக்கப்பெற வேண்டும். வேலைகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் சூலூர் பேரூராட்சி அலுவலகத்தில் 04.08.2022ம் தேதி முடிய அலுவலக வேலை நாட்களில் வேலை நேரத்தில் உரிய தொகை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி கோர விரும்புவோர்கள் அவ்வேலைகளுக்கான நிர்ணயிக்கப்பட்ட டேவணித் தொகையினை பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து 05.08.2022ம் தேதி மாலை 3:00 மணிக்குள் இப்பேரூராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். டேவணித் தொகை செலுத்தாத டெண்டர்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 05.08.2022ம் தேதி பிற்பகல் 3:30 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு இறுதி செய்யப்படும். எந்தவொரு ஒப்பந்தப் புள்ளியும் யாதொரு காரணமும் காட்டாமல் தள்ளுபடி செய்ய செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு. ஒப்பந்தப்புள்ளி தொடர்பான இதர விவரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

| வ. எண் | வேலைகள் விவரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | டெண்டர் டெபாசிட் | ஷெட்யூல் தொகை |
|---|---|---|---|---|
| 1. | வாரச்சந்தை வளாகத்தில் உள்ள பொது கழிப்பிடம் பழுதுபார்த்து பராமரிப்பு பணிகள் செய்தல். | ரூ. 10.00 | 20000 | 1770 |
| 2 | வார்டு எண்.15, கலைஞர் நகர் முதல் கிரீன் ஆர்சிட்ஸ் வரை குடிநீர்க் குழாய் விஸ்தரிப்பு செய்தல். | ரூ. 10.00 | 20000 | 1770 |
| 3 | சூலூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் செய்தல் | ரூ. 12.96 | 25920 | 7080 |

## நிபந்தனைகள்:

1. மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சம் மற்றும் ரூ. 10.00 இலட்சத்திற்கு மேல் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்க விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி நமுனா நகல் எடுத்தும் உரிய கட்டணத்தை பேரூராட்சியில் செலுத்தியும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம்.
2. இணையதள முகவரி :www.tenders.tn.gov.in

3. ஒப்பந்தப்புள்ளிக்கான டேவணித் தொகையினை செலுத்தி அசல் இரசீதினை இணைத்து மூடி முத்திரையிடபபட்ட உறையில் வரிசை எண், பணியின் விவரம் தனித்தனியாக எழுதி சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும்.
5. கட்டுமானப் பணிகளுக்கு சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகள் துறை மூலம் வழங்கப்பட மாட்டாது.
6. பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பொருளுக்கு தரம் குறித்த சான்று பெரும் அச்செலவினை ஒப்பந்ததாரரையே சாரும் என்பதையும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

செயல் அலுவலர்
சூலூர் பேரூராட்சி
சூலூர்.

**பெறுநர்**
பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்
சூலூர் பேரூராட்சி, சூலூர்
**நகல்**
1. அலுவலக விளம்பர பலகை
2.பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் அவர்கள், கோவை மண்டலம்.
3.உதவி செயற்பொறியாளர் அவர்கள், கோவை மண்டலம்.
4.இளநிலைப் பொறியாளர் அவர்கள், சூலூர் பேரூராட்சி
5.தலைவர் அவர்கள் , சூலூர் பேரூராட்சி மேஜைக்கு
6.செயல் அலுவலர், கண்ணம்பாளையம், இருகூர், பள்ளபாளையம் பேரூராட்சிகள் மற்றும் கருமத்தம்பட்டி நகராட்சி.